# குருணாகல் மாநகர சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 09 ஆந் திகதி சபையின் நகராதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, குருணாகல் மாநகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குருணாகல் மாநகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களின் நாட்குறிப்புப் பதிவு 30 இன் மூலம் ரூபா 373 மில்லியன் சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த நாட்குறிப்புப் பதிவுகளுக்கான அங்கீகாரம் பெறப்படாமை, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் பயன்படுத்தப்படாமை,

நாட்குறிப்பு இலக்கங்கள் இடப்படாமை, உரிய பேரேட்டுக் கணக்குகளில் தொடர்புகள் காண்பிக்கப்படாமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன. அவ்வாறு ரூபா 123,446,732 தொகையான நிலையான சொத்துக்களுக்காக நிதிக்கூற்றுக்களுடன் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் செலவினக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 42,408,108 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 36,420,061 ஆக ரூபா 5,988,047 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் உள்ளூராட்சி ஒய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 50,549,243 தொகை கடன்கொடுத்தோரின் கீழும் ஆண்டிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 117,136 தொகையானது செலவீனமாகவும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதிவேட்டின் பிரகாரம் அறவிடவேண்டிய நிலுவை வாகன தரித்தல் கட்டணம் 2,850,000 தொகை இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிரக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 217,757,058 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 66,330,174 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 57,621,426 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடுகள்

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் ரூபா 40,457,610 தொகையாகக் காண்பிக்கப்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகள் இனங்காணப்படாமல் 2012 ஆம் ஆண்டிற்குப்பதிலாக 2013 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட செலவினமாகக் கொள்ளப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டிற்குரிய செலவினங்கள் கடன்கொடுத்தோரின் கீழ் மிகையாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 14,604,831 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் மீதிகள் ரூபா 2,619,432 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 481,391 மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த மீதியாகும்.

(இ) 3 வங்கிக் கணக்குகளின் வங்கிக் கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 109 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 431,875 தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகள் மற்றும் 22 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 138,382 தொகையான இனங்காணப்படாத கொடுப்பனவுகள் மற்றும் 168 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 3,087,436 தேறாத பெறுவனவுகளாக தீர்க்கப்படாத மீதிகள் காணப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராதிபதியினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 83,640 | 59,289 | 24,350 |
| (ii) | வாடகை | 56,131 | 51,621 | 4,509 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 8,527 | 8,527 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 311,570 | 268,974 | 42,596 |

### 2.3.2 ஆதன வரி

வருடாந்தம் ரூபா 30 மில்லியன் அளவிலான ஆதனவரி பற்றுச்சீட்டிடல்களின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ரூபா 24,350,468 ஆகக் காணப்பட்டது. 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் ரூபா 773,600 தொகையும், 2002 தொடக்கம் 2006 காலத்திற்குரிய ரூபா 2,318,660 தொகையும், 2007 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 8,826,927 தொகையுமாக நீண்ட காலமாக அறவிடப்படாத நிலுவை மீதிகள் காணப்பட்டன.

### 2.3.3 வாடகை

குருணாகல் தம்புளு வீதியில் 01 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் ஹோட்டல் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் சகல திருத்தங்களும் வாடகையாளரினால் செய்வதற்கு இணங்கப்பட்டு 2012 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு முன்னர் ரூபா 853,222 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட திருத்தம் செய்யப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 கடை வாடகை**

பொதுச் சந்தையில் 02 கடைகள் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் வாடகைக்கு வழங்க முடியாதிருந்துதடன் அந்தக் கடைகளுக்குரிய ஆகக் குறைந்த கேள்வியை கவனத்திற்கொள்ளும் போது அறவிடக் கூடிய வருமானம் ரூபா 3,564,000 அளவாக இருந்தது. அவ்வாறே கடை வாடகையின் கீழ் பஸ் நிலையத்தில் 13 கடைகளுக்குரிய ரூபா 1,635,634 தொகையான நிலுவை மீதி காணப்பட்டது.

**2.3.5 அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

2012 ஆகஸ்ட் 28 ஆந் திகதி 5(14) ஆம் இலக்க சபை அங்கீகாரத்தின் கீழ் அறிவித்தல் பதாதை மற்றும் பெனர்களுக்கான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. அறிவித்தல் பதாதைகளின் காலம் நீடிக்கப்படாமையின் காரணமாக 06 சந்தர்ப்பங்களில் ரூபா 488,495 தொகையாக அறவிட முடியுமாக இருந்த அறிவித்தல் பதாதைக் கட்டணம் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே 2011 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டுவரப்படுகின்ற அறவிடப்பட வேண்டிய ரூபா 109,465 தொகையான நிலுவை அறிவித்தல் பதாதைக் கட்டண மீதி காணப்பட்டது. சபையினால் விளம்பர அறிவித்தல் கட்டணம் அறவிடுவதற்குரிய உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீர்க் கட்டணம்**

7129 நீர்ப் பாவனையாளர்களில் 13 சதவீதமான 923 நீர்ப் பாவனையாளர்களுக்காக சராசரி நுகர்வு அலகின் அடிப்படையில் நீர்க்கட்டணம் கணப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் புபுது மாவத்தை மொத்த பாவனையாளர்களின் எண்ணிக்கை 86 இல் 25 சதவீதமான 22 பாவனையாளர்களுக்காக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக சராசரி பாவனை லீற்றர் அளவின் அடிப்படையில் கட்டணம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**2.3.7 வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட 03 ஹோட்டல்களிலிருந்து மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247(அ) பிரிவின் பிரகாரம் புரள்வின் அடிப்படையில் 1 சதவீதத்திற்கு மேற்படாத கட்டணமொன்று அறவிடமுடியுமான போதிலும் சபையினால் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.8 தொலைபேசிப் பரிவர்த்தனை கோபுரங்களுக்கான செயன்முறைக்கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு இனங்காண்பதற்கோ அல்லது அவைகளுக்குரிய செயன்முறைக் கட்டணம், அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது ஏனைய கட்டணங்கள் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.9 வாகனத் தரிப்பிடக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்துவதற்குரிய உப விதிகள் காணப்பட்ட போதிலும் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்குரிய வருடாந்த அல்லது காலரீதியான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்து 2006 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய மா.ந.ச. 05(45) சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கட்டண அறவிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓட்டக் குறிப்பின் பிரகாரம் சிறிய கலி பவுசர் வாகனத்திற்காக 2012 சனவரி – செப்தெம்பர் காலப்பகுதியின் போது 150 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டமை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பொருள் கையேற்றல் விநியோகித்தல் பற்றுச்சீட்டுக்கள் மற்றும் எரிபொருள் பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்தல் பதிவேட்டின் பிரகாரம் உரிய கால எல்லையினுள் 610 லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கலி வாகனத்திற்காக வழங்கப்பட்ட எரிபொருள் அளவிற்கிடையில் 460 லீற்றர் வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) 43-2882 ஆம் இலக்க கலி வாகனத்திற்காக களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட எரிபொருள் அளவு மற்றும் ஓட்டக் குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட எரிபொருள் அளவுகளுக்கிடையில் 2012 ஆம் ஆண்டில் பெப்ரவரி – ஒக்தோபர் காலத்திற்கிடையில் 230 லீற்றர் வித்தியாசம் காணப்பட்டது.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்காக வருமானக் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கும் அந்தப் பதவியில் கடமைகளை நிறைவேற்றுகின்ற 04 சபை ஊழியர்களினால் சேகரிக்கப்படுகின்ற பணத்தில் 3 சதவீத தரகுப் பணமும், 8 சதவீதற்கும் 12 சதவீதத்திற்கிடையிலான வீச்சின் கீழ் தரகு அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட மூன்று நபர்களுக்காக முறையே 2012 இன் முதலாவது மற்றும் இரண்டாம் காலாண்டிற்குரிய ரூபா 104,568 தொகை மற்றும் ரூபா 173,703 தொகைகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1987 ஒக்தோபர் 05 ஆந் திகதிய யூ1/ஜீஈஎன்/7(1) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகளில் 70 அலகுகள் காணப்பட்டதுடன் அதில் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகளின் 43 அலகுகள் ரூபா 93,136,029 தொகைக்கு பெறுமதியிடப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகளின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.7 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 470 ஆக இருந்ததுடன் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 375 ஆனமையால் வெற்றிடம் 96 உம் மிகை 01 ஆகவும் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக அமைய மற்றும் நாட்கூலி அடிப்படையில் சபை நிதியத்திலிருந்து சம்பளம் வழங்கப்படுகின்ற 192 ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் கீழ் 08 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் 03 பதவியும், 02 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகளில் 01 பதவியும், 04 நூலகர் பதவிகளில் 01 பதவியும், ஒரு வைத்திய உத்தியோகத்தர் பதவியில் மிகையும் காணப்பட்டது. அவ்வாறே குருணாகல் பொது நூலகத்திற்குரிய 6 பதவிப் பெயர்களின் கீழ் 14 வெற்றிடமும் காணப்பட்டன.

(இ) நகராதிபதியின் பிரத்தியோக பதவியணியினரில் செயலாளர் பதவிக்காக 2011 நவம்பர் 22 ஆந் திகதிய 05(31) ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 20,000 கொடுப்பனவின் அடிப்படையில் நபரொருவர் சேர்க்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே வடமேல் மாகாணசபையின் அமைச்சரவைத் தீர்மான இல. 05/அமா/2012/48 இன் பிரகாரம் இவ்வாறான பதவிக்காகச் செலுத்தக்கூடிய மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 8,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் 1(அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் கௌரவ ஆளுனர் அவர்களின் அங்கீகாரத்தின் கீழ் இக்கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்ததாக நகர ஆணையாளர் 2013 செப்தெம்பர் 08 ஆந் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

## 2.8 சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான விடயங்கள்

(அ) பொதுச் சந்தையின் 03 ஆம் இலக்க கடைக்குரிய 2004 ஆம் ஆண்டில் ரூபா 291,389 தொகையான நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக சபையினால் 2006 நவம்பர் மாதத்தின் போது வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் 2007 செப்தெம்பர் வரை மாதாந்தம் ரூபா 10,000 படி தவணைப்பணம் அறவிடப்பட்டிருந்தது. மேலும் அறவிடவேண்டிய ரூபா 191,389 தொகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுச் சந்தைக் கடை இல. 02 இல் 2005 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 405,959 தொகையான நிலுவை கடை வாடகையை அறவீடு செய்வதற்காக 2006 செப்தெம்பர் மாதத்தின் போது வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் ரூபா 10,000 படி 2008 செப்தெம்பர் வரை தவணைப் பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் அறவிட வேண்டிய ரூபா 195,959 தொகையினை அறவிடுவதற்கு சபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பொதுச் சந்தையில் 01 ஆம் இலக்க கடையில் 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் ரூபா 191,751 தொகையான நிலுவைக்காகவும் 03 ஆம் இலக்க கடையில் 2006 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 125,308 தொகையான நிலுவைக்காகவும், 05 ஆம் இலக்க கடையில் 2006 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 85,460 தொகையான நிலுவைக்காகவும், 04 ஆம் இலக்க கடையில் 2006 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைக்காகவும் 2010 ஆம் ஆண்டு வரையில் வழக்குத் தொடரப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட போதிலும் உரிய கோவைகள்

கணக்காய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் வழக்குகளின் எதிர்கால செயல்முன்னேற்றங்களையும் இனங்காண முடியாதிருந்தது.

(ஈ) நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 252,487 தொகைக்குரிய 03 வழக்குகள் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

ரூபா 40 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந வெஹெர வியாபாரத்தொகுதி மற்றும் வீடமைப்புத் தொகுதி நிர்மாணங்களுக்குரிய நிர்மாணங்களுக்காக 53 சதவீத பங்களிப்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 21 மில்லியன் அளவிலான கடன் பணத்திற்காக ரூபா 2,131,872 தொகையான கடன் வட்டி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலுத்த வேண்டியிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் 2012 யூன் மாதத்தின் போது முடிவடைந்திருந்ததுடன் கட்டிடத்தின் அரைவாசியளவு உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேலதிக வேலைகளுக்காக ரூபா 2,372,755 தொகையளவில் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அருகிலுள்ள வீதி விரிவாக்கம் செய்யப்பட்டமையின் காரணமாக அதன் மேலதிக நிர்மாணங்களை அகற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருந்தது.

## 2.10 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 50,549,243 ஆக இருந்தது.

(ஆ) மாநகர சபையினால் வாடகைக்கு வழங்கப்படுகின்ற புதிய கடைத் தொகுதியில் 2012 சனவரி - யூன் வரையான காலத்திற்குரிய மின்சாரச் செலவினம் ரூபா 8,148,188 தொகையும், சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவாக ரூபா 986,466 தொகையும், மங்கள நடவடிக்கைகளுக்கான ரூபா 210,000 ஆன மீண்டெழும் செலவினமும், செயற்பாட்டுச் செலவினமாக ரூபா 9,344,654 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக அக்காலப்பகுதியில் ரூபா 148,430 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. எனினும் இந்தக் காலத்திற்குரிய வியாபாரக் கடைத் தொகுதிக்காக பற்றுச்சீட்டிட

முடியுமான வருமானம் ரூபா 9,459,600 ஆக இருந்தது. அதன் பிரகாரம் உரிய செயற்பாட்டுச் செலவினங்களுடன் ஒப்பிடுகின்ற போது கடைத்தொகுதியில் போதியளவான வருமானம் நகர சபை நிதியத்திற்கு உழைக்கப்படல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) வாகனப் பயன்பாடு